13ஆவது வருடத்தில்....

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 — 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை — மாதமிருமுறை — இலவசம்

5வது இதழ் வெளிவந்துவிட்டது

உலகத் தமிழோசை

தூங்கப் போன நகரம்

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)




Direct: 416.315-9397

OFFICE: 416.321-6969

Sales Agents Welcome

நதி 13 — OCTOBER 01, 2003 — பாலம் 19



## புலம்பெயர்ந்த நாட்டில் பதிப்பகத் துறையில் முழக்கத்தின் சாதனை!

Since 1987

வசந்தா நகை மாளிகை

வசந்தன் - பத்மநாதன்

பத்தர்களின் கைவண்ணத்தில் தங்கத்தின் புதிய வடிவங்கள்!

Tel: 905 848 5151 — Fax: 905 848 8502

OPEN 10:30AM - 8:30PM — MONDAY CLOSED

3025 Hurontario St., Unit. 103A, Mississauga

## உங்கள் மோட்கேஜ் பக்கம்

வீடுவாங்குபவர்கள் CMHC காப்புறுதி பற்றி அறிந் திருக்க வேண்டிய விடயங்கள்.

**CMHC INSURANCE.**

புதிதாக வீடுவாங்குவோர் எதிர்கொள்ளும் சொற்றொடர்களில் CMHC Insurance உம் ஒன்றாகும். சிலர் இதுபற்றி அறிந்திருப்பர். இத்துறையில் அனுபவமில்லாதவர்கள் முதல்முதலில் கேள்விப்படும்பொழுது, வீட்டிற்கான தீ, களவுக்காப்புறுதி, குடும்பத் தலைவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படின் அடமானத்தை செலுத்தும் காப்புறுதியுடன் குழம்பிக்கொள்வர். இது முற்றிலும் வேறு பட்ட ஒரு பொருள்.

**CMHC என்றால் என்ன?**

கனடா மோட்கேஜ் வீட்டுவசதி வாரியம் (Canadian Mortgage Housing Corporation) என்பதன் சுருக்கம் (CMHC) ஆகும். மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இவ்வாரியம், கனடாவில் வீட்டு உரிமையாளர், வாடகை குடியிருப்பாளரின் நலத்தை பேணுவதுடன் கட்டிட நிர்மாணத்துறையில் ஆராய்ச்சிகளை மேற் கொண்டு தகவல்களைப் பரிமாற்றம் செய்வதிலும் ஈடுபடுகிறது. மேலும் வசதி குறைந்தவர்கள், ஆதிகுடிகள் போன்றோருக ்கான வீடமைப்பிலும், கனேடிய நிர்மாணப் பொருள்களை சர்வதேச சந்தைப்படுத்தலிலும் மத்திய அரசின் அமைப்பாகச் செயல்படுகின்றது. இவை எல்லாவற்றையும் விட கனடியர்கள் பெருமளவில் வீட்டு உடமையாளர் ஆவதற்கான Mortgage Loan Insurance ஐ வழங்குவதன் மூலம் CMHC பரவலாக அறியப்பட்டிருக்கிறது.

***CMHC வழங்கும் Mortgage Loan Insurance எவ்விதம் வீடுவாங்குவோருக்கு அனுசரணையாக இருக்கும்/*** (தொடர்ச்சி 19ஆம் பக்கம்)

Singapore Communication

Since 1991

Only $25

50 + 50 Bonus Anytime — Evenings & Weekends

First Monthly Fee (a $25 Value)

+ Save Extra $100 Off Handset

Hurry Offer Ends Soon

More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W.,Unit 17ABC-(Kipling & Steeles)

விபுலாநந்த அடிகளாரின்

யாழ் நூல்

கனடாவில் வெளிவருகிறது!

இடம் - ஸ்காபுரோ சிவிக் சென்டர் அரங்கு

காலம் - மாலை 5.30க்கு, ஒக்ரோபர் 04, 2003

தொடர்புகளுக்கு: சிவா: 416 220 3337 வேந்தன்: 416 892 7222

ஒல்கார் - தொலைபேசி: 416 703 5620

## அருள்விருந்து

* வேடுவனுடைய வலையினின்று பறவை தப்பித்து ஓடுவது போன்று சான்றோர் இந்திரிய அகங்களினின்று தப்பித்து ஓடுகின்றனர்.
* உடல் பெரிய தாவதற்கிடையில் யாருடைய உள்ளம் குளந்தையின் உள்ளம் போன்று தூயதாயிருக்கிறதோ அம் மனிதன் மேலோன் ஆகிறான்.
* பறவைகளைப் போன்று இருக்கின்றனர் சான்றோர் அவர்கள் தங்களுக்காக வென்று எதையும் சேகரித்து வைப்பதில்லை. யாண்டும் கடவுளைச் சார்ந்திருப்பது அவர்கள் இயல்பு.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

திங்கள் - வியாழன்

காலை 7am - 2pm,

மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.

ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

9.00A.M - 9.00P.M

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

# குறிநிலையை அழுத்தி நோய்களைத்தீர்ப்போம்

எமது உடம்பில் உள் உறுப்புக்கள் சுற்றாடல், சூழலுடன் தொடர்பு கொண்டு அவற்றை சீர்செய்வதற்காக இயற்கையால் குறிநிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் தொடர்புகள் தடைப்படுவதால் அவற்றுள் சஞ்சரிக்கும் சக்தி தடைப்பட்டு ஒரு பாகத்தில் தேங்கியும் ஏனைய பாகத்தில் குறைந்தும் இருப்பதால் நோய் தோன்று கின்றது என்பதே குறிநிலைத்துழை (Acupuncture) குறிநிலை அழுத்து( Acupressure) வைத்தியங்களின் தத்துவ மாகும். இப்படியான குறிநிலைகள் உடம்பின் பல்வேறு பாகங்களிலும் இருக் கின்றன. காது, தலை இவற்றில் அதிகம் குறிநிலைகள் உண்டு. காதின் குறி நிலை கள் 'ஓறிக்கியூளர் அகியூபங்சர் என்றும் தலைமண்டையோட்டின் குறி நிலைகள் (Scalp.A cp) என்றும் குறிப்பிடப் படும். காதில் 200 குறிநிலைகள் உண்டு. தலையில் நூறு குறிநிலை உண்டு. உடம்பு குறிநிலைகள் (Body Acp.) உடம்பில் பல் வேறு பாகங்களிலும் காணப்படும்.

டாக்டர். சி.வ.
பரராஜசிங்கம், PH.D
வவுனியா, இலங்கை

இவற்றில் மிக மெல்லிய ஊசி (Filiform Need les) ஏற்றப்பட்டு நோய்கள் நீக்கப்படும். ஆனால் இந்தக் குறிநிலைகளை அழுத்தி நோய்களைக் குணப்படுத்தலாம் என்பதே குறிநிலை அழுத்து வைத்தியத்தின் தத்துவம்.

உள்ளங்கை, கால்களில் உள்ள குறிநிலைகள் பிரதிபிம்ப நிலைகள் எனப்படும். (Reflex Points) இதன்படி நோய் நீக்குவதை றிப்ளெக்ஸோலொஜி என்பர். (Reflexology). இந்த குறிநிலைகள் அதிகம் மென்மையும் உணர்ச்சியூட்ட வல்லனவு மாகும். (Tender & Sensitive) இவற்றை அழுத்தி சாதாரணமக்களே நோய்களை விரைவில் குணமாக்க முடியும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. இங்கு தரப்படும் பிரதி பிம்ம நிலைகளை அழுத்தும் பொழுது மூச்சை உள்இழுத்துப்பின் அழுத்தலைத் தளர்த்தும்போது மூச்சை வெளியே விடவேண்டும் என்பது ஒரு பொதுவான பிரதான விதிமுறை. இந்த பிரதிபிம்ப நிலைகளை அழுத்த அந்த உள் உறுப்புக்கள் படிப்படியாக நல்ல நிலைக்கு வரும். குறிப்பிட்ட பிரதிபிம்ப நிலைகளில் வலி இருந்தால் அந்தக்குறி நிலை குறிப்பிடும் உள் உறுப்பு பாதிப்படைந் துள்ளது என்று அர்த்தம். எனவே அவ் விடத்தை ஆரம்பத்தில் மென்மையாக சில வினாடிகள் அழுத்தினால் வலி படிப்படியாக நீங்கும். அதன்பின் படிப்படியாக அழுத் தலைக் கூட்டி தொடர்ந்து அழுத்தினால் வலி நீங்கி உள்உறுப்புக்களும் நல்ல நிலைக்கு வந்து விடும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. இது முதலுதவி சிகிச்சைமுறை. இதன் பிரகாரம் திடீரென தோன்றிய நோய்களை நீக்கலாம். அதன்பின் வைத்தியரிடம் ஆலோசனை பெற்று அதற்கேற்ப தகுந்த சிகிச்சை பெற லாம். எந்த வைத்தியமுறையில் சிகிச்சை பெறுவோரும் இந்த குறிநிலை பிரதி பிம்மநிலை அழுத்தத்தை கையாண்டு தமது உள்உறுப்புக்களை நல்லநிலைக்கு கொண்டு வரலாம். நோயும் விரைவில் குணமாகும்.

மண்டைக்குழிகள் (Sinuses) - இவை தலை, மூக்கின் இருமருங்கிலும் மண்டை ஓட்டினுள் காணப்படும் குழிகள் இவற்றினுள் சளி அல்லது சீழ் தேங்கி பல நோய்கள் உண்டாகும். இவற்றை இந்தக் குறி நிலையை அழுத்திக் குணப்படுத்தலாம்.

தைறோய்ட் பராதைறோய்ட் (Thyroid & Parathyroid) இந்தக் கோளங்கள் கழுத்தின் இருபக்கமும் காணப்படும். இவை சுரக்கும் ரசம் உடம்பில் பல ஜீவதத்துவ பரிணாமத்திற்கும் அவசியம். இதன் செயற்பாடு கூடிக்குறைவதால் பல நோய்கள் தோன்றும். இந்தப் பிரதிபிம்ப நிலைகளை தினம் அழுத்தி இந்தக்கோளக்தை நல்ல நிலையில் வைத்திருக்கலாம். நோய்களை நீக்கலாம், நோய்கள் வராது தடுக்கலாம்.

தொண்டை(Throat) இது கழுத்தின் முற்பாகத்தில் உள்ளது. இதில் வரும் பலநோய்களையும் இந்தக்குறி நிலையை அழுத்திக் குணப்படுத்தலாம். 'பிரியூரறி' (Pituitary Gland) இது மூளைக்குள் உள்ள பயறு போன்ற கோளம். இதன் செயற்பாடே உடம்பின் சகல உறுப்புக்கள் வளர்ச்சி, செயற்பாடு ஆவனவற்றைக் கட்டுபடுத்தும். இந்த பிரதிபிம்ப நிலையை அழுத்தி கோளத்தை நல்ல நிலைக்கு கொண்டு வரலாம். மூளை (Brian) பெருவிரல்களின் உள்ளங்கை முற்பாகம் இதன் குறிநிலை. நன்கு அழுத்தி மூளையைப் பலப்படுத்த லாம். ஞாபகசக்தியைக் கூட்டலாம்.

கண் (Eye) இதன் குறிநிலை இரண்டு மூன்று, ஐந்தாம் விரல்களில் மூன்றாவது அங்குலாஸ்திகளிலும் அவற்றின் இளை களிலும் உள்ளன. இவற்றை அழுத்தி கண்களின் நோய்களைத் தீர்க்கலாம்.

காது (Eye) இதன் குறிநிலை நான்காவது விரலின் மூன்றாவது அங்குலாஸ்தியிலும் அதன் இறையிலும் காணப்படும். இவற்றை அழுத்தி காது நோய்களைத்தீர்க்கலாம்.

சுவாசப்பை அல்லது நுரையீரல் (Lungs) இந்த குறிநிலை அழுத்தல் நெஞ்சில் சளியைக் குறைக்கும். சுவாசத்தை நல்ல நிலைக்கு கொண்டுவரவும் உதவும். சுவாசப்பையைப்பலப்படுத்தும். தோள் (Shoulders) இந்த குறிநிலை அழுத்தல் தோளில்வரும் நோய்களைத் தீர்க்கவல்லது.

அட்றெணல் கோளம் (Adrenal Gland) இந்த குறிநிலையை அழுத்தி உடம்பின் சோம்பலை (3) நீக்கலாம், தொய்வு நோய் வருவதைத் தடுக்கலாம். ஒவ்வாமையை (Allergies) நீக்கலாம். 'தைமஸ்' கோளம் (Thymus Gland) இந்த குறிநிலை உற்சாகத்தை வருவிக்கும். உடம்பின் எதிர்ப்புச்சக்தியை (Immunity) கூட்டும். நோய்களை விரைவில் குணமாக்கும்.

கழுத்து (Neck) இந்த குறிநிலை அழுத்தல் கழுத்தில் வரும் நோய்களை மாற்றும். கழுத்து கல்லீரல் (Liver) இந்த குறிநிலை அழுத்தல் கல்லீரலை பலப்படுத்தி நோய்களைத் தீர்க்கும். கல்லீரல் வீக்கம் மஞ்சள்காமாலை போன்ற நோய்களை குணப்படுத்த உதவும். பித்தப்பை (Gall-Bladder) இந்த குறிநிலை அழுத்தல் பித்தப்பையில் ஏற்படும் நோய்களை நீக்கும். கல்லீரல் வீக்கம் செயலிழப்பு மஞ்சள்காமாலை போன்றவை நீங்கும்.


'பங்கிறியாஸ்' வயிறு இந்த குறிநிலை அழுத்தல் வயிற்றையும், இந்தக் கோளத்தையும் பலப்படுத்தி நீரிழிவு (Dia betes) நோயை நீக்கும். உணவை விரைவில் ஜீரணிக்கச் செய்யும். 'ஸோலா ப்ளெக்சஸ்'(Solar Plexus) இந்த குறிநிலை அழுத்தல் வயிற்றிலும், குடலிலும் உள்ள நரம்புமண்டலத்தை நன்கு செயற்படச் செய்யும். மனம் பதட்டமடைவதை குறைக்கும். ஜீரண சக்தியைக்கூட்டும். வயிற்று உப்பிசம் நீங்கும்.

பெருங்குடல் (Colon) இந்த குறிநிலை அழுத்தம் பெருங்குடலைப்பலப்படுத்தும். வயிற்றில் வாயுவை நீக்கும், மலச்சிக்கலை நீக்கி மூலவியாதி போன்ற அங்குவரும் நோய்களை நீக்கும்.

சிறுநீரகம் (Kidneys) இந்த குறிநிலை அழுத்தல் சிறுநீரகத்தைப் பலப்படுத்தும். அதன் நோய்களை நீக்கும். இதுபலப்படுத்துவதால் வீக்கம் போன்ற சிறுநீரக நோய்கள் நீங்கும்.

சலப்பை (Urinary Bladder) இந்த குறிநிலை அழுத்தல் சலப்பையை பலப்படுத்தும், நீரொழுக்கு, தடை போன்ற சலப்பையில் வரும் சகல நோய்களையும் நீக்கும்.



**JAMUNA WINDOW COVERING**




**DRAPES & BLINDS**

தொடர்புகளுக்கு: 416-298-0234
PAGER : 416-426-8986

**புதிய இசை வகுப்புக்கள் ஆரம்பம் விஜயதசமி -**



**அக்டோபர் 04, 2003**



புதிய தலைமுறையினருக்கு கர்நாடக இசை ஆர்வத்தை தூண்டவும், தமிழிசை கலாமன்ற பரீட்சைகளுக்கு தயார் செய்யவும். வாய்பாட்டு, வயலின், வீணை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

**ஆசிரியை: துளசி சிங்கராஜா**
பலவருட இசை ஆசிரிய பயிற்சி அனுபவம் உடையவர்.

வகுப்புக்கள்: Scarborough, North york , Down Town ஆகிய இடங்களில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு: 416-244-7253

**SAFETY TRUCKS**
**Training School Ltd.**

Training & Trucking
Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (9ஆம் ஆண்டு)

We Accept Welfare & Unemployment Insurance

வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.




*In Classes*
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

16 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(905) 793-9546 / (416) 616-5979

250 Summerlea Road, Brampton, ON

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN

Accredited Test & Repair Facility

* Detailing
* Motor Shampoo
* Interior Shampoo
* Exterior Wash
* Waxing
* Repairs
* Safety Certification
* Overall Maintenance
* Under Coating
* Rust Proofing

**416-285-4998**

**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL




## சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திய ஒன்று கூடல்

கனடாவில் இயங்கிவரும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர்கள் தமது வருடாந்த ஒன்று கூடலைக் கடந்த 13-09-2003 சனிக்கிழமையன்று நடத்தியது. நெல்சன் பூங்காவில் இடம்பெற்ற மேற்படி ஒன்றுகூடலில் ஏராளமான ஊர் மக்கள் தமது குடும்பத்தாருடன் கலந்து சிறப்பித்துள்ளார்கள். சிறுவர், சிறுமியருக்கான விளையாட்டு நிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடத்தப்பட்டன. சாவகச்சேரி மக்கள் தமது ஊர்ப்பற்றை நிரூபிக்கும் வகையில் அங்கு குழுமியிருந்து உற்சாகமூட்டினர்.





## இராகலயம் நுண்கலைக்கூடம் ஆண்டுவிழா 2003

இராகலயம் நுண்கலைக்கூடம் மாணவ, மாணவியர் பங்கு கொண்டு சிறப்பிக்கும் "இராக சங்கமம்" என்னும் பல்சுவை இசை நிகழ்ச்சி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் (October) 11-10-2003 மாலை 3.00 மணிக்கு 100 CARDINAL NEWMAN SECONDARY SCHOOLS , BRIMLEY என்னும் மண்டபத்தில் இடம் பெறுகிறது. வயலின், கீபோட், வாய்ப்பாட்டு, வாத்தியவிருந்து, கர்நாடக இசை, மெல்லிசை, திரை இசைப்பாடல்கள் என்னும் பல்சுவை அம்சங்கள் இடம் பெறுகிறது. இந்நிகழ்ச்சிக்கு ஜெர்மனிய நாட்டிலிருந்து வருகைதரும் கலைஞர் கலைமாமணி K.S. ராஜ்குமார் சிறப்புவிருந்தினராகவும், திரு. சாமி அப்பாத்துரை அவர்கள் பிரதமவிருந்தினராகவும் கலந்து கொள்கிறார்கள். நிகழ்ச்சிக்கான அனுமதி அழைப்பிதழ் உள்ளவர்கள் மட்டுமே! நிகழ்ச்சி பற்றிய விபரங்களை அறியவும்.

தொடர்புகளுக்கு: K.S. Ravindran 416-496-8408 Vimalendran 416-495-0428
Mrs. Ratnakaran 416-746-9505


# Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்



2003ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

* SONALIKA PURE SILK
* JARDHOSHI SATIN & CREPE SILK
* JAPAN CRYSTAL SILK
* JAIPUR CRYSTAL SILK
* VASUNTHARA NETWORK CREPE

T.P: 416-778-455
Fax: 416-778-8484
1453 GERRAD STREET, EAST, (INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E. (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)




# MORTGAGES

Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below



LOW - LOW RATES AVAILABEL. TO GET BEST RATE IN TOWN PL. CALL: ANIL JOSHI

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply





For more information call:
**Anil Joshi** at
**416.888.1072**


Niru BRAND®
'நிரு' தயாரிப்புக்கள்'
கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன
No.1
முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்
தரம்
No. 1
Manufacturers & Distributors of
Niru Brand® Products
NIRU ENTERPRISES INC.
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com
Distributors in Europe
Niru (Europe) Ltd.,
16 College Fields Business Centre
Prince George's Road, London SW19 2PT U.K.
Tel:208-640-8228 Fax: 208-640-8423
E-mail: niru@supanet.com
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
JAFFNA
Hot Curry Powder
POUDRE DE CURRY JAFFNA (PIQUANT)
Free
Spoon Inside

# சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து



## பொது நலம் எனும் சுயநலம்

யார் சொன்னார்கள் சுயநலம் கூடாது என்று? பொதுநலமாக சிந்தித்து செயற்பட்டால் தான் இந்த மண்ணில் மனிதன் அமைதியாக வாழ முடியும் என்ற உண்மை எமக்கு தெரிந்த போதும், பொதுநலத்தின் அடிப்படையே சுய நலம் தான். நான், எனது என்பது நாமாக, எமதாக மாறி விடுகின்றது. நான் என்ன வகையில் முன்னேறலாம், வாழ்க்கையில் வெற்றி அடையலாம் என்று சிந்திக்க வேண்டும். வெற்றி பெற வேண்டும் அதில் தவறில்லை. ஆனால் அந்த சிந்தனையில், முயற்சியில் யாராவது பாதிப்படைகிறாரா? என்பதை நாம் கவனமாக அவதானித்து நடந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் சிந்தித்து செயல்படும் போது, நான் முன்னேற வேண்டும் என்ற சுயநலம் பொது நலமாக மாறி விடுகின்றது. எனது முன்னேற்றத்தினால் யாரும் பாதிப்படையவில்லை என்பதிலும் பார்க்க பலர் நன்மை அடைவார்கள் என்று வரும் பொழுது அது சுயநலத்திற்கு கிடைத்த வெற்றியாகி விடுகின்றது. அது தான் பொதுநலம்.



உலகில் பிறந்த ஞானிகள், மகாத்மாக்கள், தலைவர்கள் எல்லோருமே சுய நலத்தின் வடிவங்கள் தான். மனிதன் இந்த மண்ணில் தோன்றிய காலம் தொட்டு நான் எனது என்று சிந்திக்க ஆரம்பித்து என்னில் இருந்து உருவான உறவுகளையும் சேர்த்து எமது என்று சிந்திக்க எண்ணியதன் விளைவாக எமது இனம், எமது மொழி, எமது மதம் என்று சிந்திக்கத் தலைப்பட்டு அந்த இனத்தையும், மொழியையும், மதத்தையும் காக்க வேண்டும், என்று பொது நலமாக நாம் சிந்திப்பதாக எடுத்துக் கொண்டாலும் மற்றைய இனங்களும் மற்றைய மொழிகளும் மற்றைய மதங்களும் அந்த சிந்தனையால் பாதிப்படையாத வரையிலேயே அது பொது நலமாகின்றது. இல்லாவிடில் நாம், எமது என்று சிந்தித்து செயல்படுவதே சுயநலமாகி விடுகின்றது.

மனிதன் இந்த மண்ணில் தம்மையும், தமது மண்ணையும் பாதுகாத்து கொள்ள அரசாட்சிகளை உருவாக்கினர். சிந்தனை வளர்ச்சி விரிவடையாத காலத்திலேயே சிந்தித்தித்து மனித மேம்பாட்டிற்கு மதங்களை உருவாக்கினர். அரசாட்சிகளும் மதங்களும் மனித இனத்தை ஆண்டு கொண்டும் அழிவுக்கு வழி வகுத்து கொண்டும் இருந்து வரும் காலத்தில், 20 ஆம் நூற்றாண்டு மனிதனின் சிந்தனையில் செயலில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வந்தது. அதுவும் நாடுவிட்டு நாடு சென்று தனது சுபீட்சமான வாழ்வு தேடி தென் ஆபிரிக்கா நாட்டில் வாழ்ந்து வந்த மோகனதாஸ் காந்தி என்ற மனிதனின் சுய மரியாதைக்கு விழுந்த இன வாத அடியின் பிரதிபலிப்பின் விளைவாக உலக மக்கள் சிந்தனையில் ஒரு வெளிச்சம் உருவானது. சிந்தனை பாதையின் திசை மாறியது. பின்னாளில் தமது சிந்தனையின் விளைவால் மோகன்தாஸ் காந்தி மகாத்மா ஆகினார். மக்கள் தலைவர் ஆனார்.



மகாத்மாவின் வரவிற்கு பின்னால் வந்த நாட்டின் தலைவர்கள் எல்லோரும் மகாத்மாக்கள் ஆகிறார்களா? என்று கேட்டால் பதில் கவலைக்கிடமானதாக தான் இருக்கும். பொது நலம் என்ற பசுந்தோல் போர்த்த சுயநலம் என்ற புலிகளைத்தான் காணக்கூடியதாக இருக்கின்றது. மனிதன் தன்னை வளர்த்துக் கொள்ள அண்டிப்பிழைக்கும் வழியை ஆதிகாலத்தில் இருந்தே கடைப்பிடித்து வந்து இருக்கின்றான். வாள்பிடித்து வாழ்வது என்பது மனித இரத்தத்தில் மரபு அணுக்களில் இரண்டாகக் கலந்து விட்டது. மாற்ற முடியாததாகி விட்டது. மாகாத்மா பிறந்த இந்திய மண்ணிலேயே தோன்றிய இனம் தமிழ் மொழி பேசும் இனம் தமிழ் இனம். அந்த தமிழ் இனத்தையும், மொழியையும் காக்க என்ற பசுத்தோலை போர்த்திய புலிகளாக திராவிடக் கழகங்கள் தமது கஜானாவை நிரப்பிக் கொள்வதற்கு தமிழ் இனத்தை சூறையாடி வரும் சரித்திரத்தை தேவி பத்திரிகையில் அக்கு வேறு ஆணிவேறாக பிரித்து உணர்த்தி வரும் அன்பன் செந்தில் குமரனது 'ஏன் வேண்டாம் இன்பத்திராவிடம்' என்ற கட்டுரையை ஒவ்வொரு தமிழ் மகனும் வாசிக்க வேண்டும். பொதுநலம் தமிழ் நலம், தமிழ் மக்கள் என்ற பெயரில் நடைபெறும் சுயநலம் புரியும்.

சிந்தனை தொடரும்...

பரம் G.
ஒரு சாதாரணமனிதன்


Mortgage! Mortgage! Mortgage!

**Commercial or Residential**

உங்கள் Mortgage தேவைகள் எதுவாக இருந்தாலும் இன்றே அழையுங்கள்.



Raj / Sheela (Mortgage Consultant)
புதிய தொலைபேசி எண் - 905-887-8585
Fax: 905-887-7835
(more than 15 Years Experience In Mortgage)
Kings Dale Mortgage Corporation

**LARGE INDOOR PUBLIC CAR AUCTION**

***EVERY WEDNESDAY EVENING***
***STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM***

**100+ VEHICLES ON DISPLAY INDOORS**

INCLUDE MANY LATE MODEL
> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
>V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

**WEEKLY CASH BUYERS DRAWS OPEN**
**MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM**
**FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM**
**1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ONTARIO.**


**CIA PUBLIC AUTO AUCTION & SALES**
**416 - 242 - 5052**
www.cialeasing.com



வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில் முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

**Param Gnana**
Sales Representative
HomeLife GTA Realty Inc.

www.themathuram.com
Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)





# நாமும் நமது இல்லமும் 173

வீடு வாங்குபவர்களிற்கு.....

வீட்டை பார்க்கும் போது கவனிக்கப் படவேண்டியவற்றில் முக்கியமானவை...

## ராஜா மகேந்திரன்

1. கூரை
2. வீட்டின் வெளிப்பக்க
   - வீட்டின் வெளிப்பக்கம்
   - வீட்டின் வெளியேயுள்ள நிலத்தின் பகுதி, கார் தரிக்கும் இடம்.
3. வீட்டின் கட்டப்பட்ட முறை (Structure)
4. எலெக்றிக்கல் அமைப்பு
5. வெப்பமிடல் / குளிரூட்டல் போன்றவற்றையும் அவைபற்றிய உபகரணங்களும்.
6. காற்றோட்டமும், வெப்பம் / குளிர் போகாமல் தடுக்கப்பாவிக்கப்படும் பொருட்கள். (Insulation material)
7. தண்ணீர் / கழிவுகள் ஓடப்பாவிக்கப்படும் முறைகள் / அமைப்புடன்
8. வீட்டின் உயர் அமைப்பு

* மேலே குறிப்பிட்டவர்களின் பற்றிய தனித்தனியாக அடுத்த இதழில் ஆராயப்படும்.

**HOUSE FOR SALE**
Brand New House, 3100 Sq. ft, Old Finch/MorningSide , walkout $419,900

**HOUSE FOR SALE**
Neilson / Sheppard
3 Bedroom + 2Br Bsmt, No Side Entrance. Price $239.900.

**HOUSE FOR SALE**
Neilson / Finch
Detached House / 3Bedroom / 6mth new, Price $299,000.
New Construction.

**HOUSE FOR SALE**
Semi Detached Raised Bungalow
3 Bedroom + 1Br Bsmt, 2 Kitchen, 2 Washroom Single Garge
Sep.Entrance. Price $259.900.
Markham/Sheppard

**CONDO. FOR SALE**
Neilson / Sheppard 1 + DEN. FRIDGE, STOVE, WASHER, DRYR, CAC.

**CONDO FOR SALE**
3 BR, 2 washroom,
Mccowan / Eglinton
$159,900.00

**SPACE FOR RENT**
Finch & Middlefinch
OFFICE SPACE FOR RENT
* 850 SQFT * 1338 SQFT
Please call: 416-315-9397

**CONDO FOR SALE**
Warden /Finch 3 BR, 2 washroom.
Price $1,79, 900.


**TOWN HOUSE FOR RENT**
KENNEDY & ELLESMERE
3 BR/Single Garge, 2 washroom
$1100 Availabel Anytime.

**HOUSE FOR SALE**
Semi Detachaed 4 Bedroom. Sep. Entrance. Price $219, 900.
Neilson / Sheppard

**Raja M. Mahendran,** P. Eng.
Vice President/Sales Rep.
Office - Tel.: (416) 321-6969
Direct: (416) 315-9397
Email: raja@mahendran.ca

| Interest | Rate |
|---|---|
| 5YrsMortgage | 4.49% |
| Prime rate | 5% |
| Bank rate | 3.25% |

**COLOMBO PHOTO STUDIO**
(DIVISION OF ST. FRANCIS PHOTO)
DIGITAL PHOTO STUDIO
WEDDING,
BIRTHDAY,
ARANKETTAM,
BABY PHOTO,
FAMILY PORTRAIT,
PASSPORT, CITIZEN,
PUBERTY CEREMONY,
P.R CARD, ID PHOTO
ETC.......
416 752 4444



FREE FREE FREE
2 - 5 x 7 Studio Portrait
Enlargement Free
(Couple or Family)
With Purchase of any
Passport, Citizen,
Permanent Resident Card,
ID Photo
(Picture Value $20.00)
Digital Special Effect
From $25.00
DIGITAL VIDEO TRANSFER
CEDARFACE PLAZA
2296 Eglinton Ave. East
SCARBOROUGH

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**

**Accident & Traffic Ticket**
(14 Years Insurance Claims Experience)

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும். * உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள் * விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்



(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON

**வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?**



வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா?
கவலையை விடுங்கள்.
முற்றாக ஒழிக்க அழையுங்கள்.



No Spraying
• No Smelling
• No Moving




**Call: Kanthan** **Tel: 416-283-9538**

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்

**விருது பெற்ற**

# VIVEKA PRINTERS



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4 SCAR., ON
416-410-6401

நகைச்சுவைத் தொடர்....



# ராசம்மா ராச்சியம்



94

கல்வியா? செல்வமா? வீரமா?





பிறந்தநாளிலிருந்து இன்றுவரை கல்வியா? செல்வமா? வீரமா? என எத்தனை பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி பட்டிமன்றம், கவியரங்கு கண்டனாங்கள்.


உலகண்ணை.... நவராத்திரி விழாவை எப்படி மறப்பது. கல்வி கற்பதற்காக எத்தனை பேர் வெளிநாட்டில் கனடா, அமெரிக்காவிற்கு Student Visa விண்ணப்பித்து வருவதற்கு ஏங்கி நிற்கின்றனர்.





போரால் இழந்த செல்வத்தை மீள எப்படிப் பெறுவது? இழந்த செல்வங்கள் எப்படியண்ணை? வரும் என, நெஞ்சுப் பதட்டத்தைக் கொட்டினா ஆட்டிலறி அன்னம்மா....


வீரத்தைப்பற்றி சொல்வதற்குள் வியட்நாமில் வீரம் காட்ட முடியாத அமெரிக்காவை சொல்வதா; வீரப்போர் புரிபவர்களை பயங்கரவாதி என்று சொல்லும் உலகத்தை என்ன சொல்லுவது? என நீண்டபெருமூச்சு விட்டார் உலகர்.



பல்கணியில் சர்வதேச கொடிகள் போல காயவிட்டப்படும் பலரின் உடுப்புக்களைக் காணவில்லை.
ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் இடையிடை பறக்கும் சமாதான கொடிபோல.... உலகரின் 4 முள, 8 முள வேட்டியைக் கூடக் காணவில்லை.....

B.B.Q போல் கரி.. பாரைக்கருவாடு.... 4 நாட்களாக....ஆட்டிலறி உலகர் ராசம்மா...செக்கண்புளோர் செல்லம்மா... நீண்ட திட்டமிட்டு இசபேல்.... சூறாவளி வந்தால் எப்படியிருக்கும் என்பதை திட்டமிட்டு உலகருக்கு ராசம்மா கட்டாய கட்டளையின் பேரில் 8முளம், 4முளம் வீட்டுக்குள்ளேயே காயவிடப்பட்டது.


வேட்டியை... பல்கணியில் காயவிட்டார் இசபேல் கொண்டு போய்விடுமோ என்ற பயம். புளிச்சாதம் 4, 5 நாளுக்கு சமாளிக்கும் என உலகர் சொல்ல...தயிர்ச்சாதம் சாப்பிட்டு வயிறு

குளப்படி செய்தால் என சிரித்தபடி சொன்னா அன்னம்மாக்கா. ஒண்டும் செய்யாது என்று செக்கண்ட்புளோர் செல்லம்மா சிரிச்சா. பாத்திரங்கள் உருளும் சத்தம் கேட்டதும் அய்யோ.. இசபேல் வந்திட்டாள்! வரசித்தபிள்ளையாரே, வல்மொரின் முருகா, கதிரமலைக்கந்தா... சன்னதியானே.. எங்களைக் காப்பாற்று. கறன்ற் நிக்கக் கூடாது இரவைக் காக்க...காக்கா..பார்க்க.
வேறு இண்டைக்கு இரவு காக்க காக்க படம் பார்க்கவேணும் எண்டா செல்லம்மா.



செல்லம்மா அலற எடி செல்லம்மா அது ராசம்மா பாலுறட்டி சுட்டு வைக்க பாத்திரம் எடுக்கேக்கை பாத்திரம் விழுந்த சத்தம் தான் என்று சிரிப்புச் சிரித்தா அன்னம்மா





கல்வி செல்வம் வீரம் சரஸ்வதிப்பூசை, விஜயதசமி நினைக்கும்போது உலகரின் மனம் பழையநினைவுகளை மீட்டியது.

கனவில் கண்டதை நினைத்து கலங்குபவர்களும் உண்டு. கண்ட கனவை நினைத்து.. கலக்குபவர்களும் உண்டு.
கனவு கண்டேன்....நான்.... கனவு கண்டேன்....
காதல் கனிந்து வர கனவு கண்டேன்.
என்ற பாடலைக் கேட்டால் பல கற்பனைகள் தோன்றும்
அதேவேளையில்..... போகாதே....
போகதே..என்கணவா.....
பொல்லாத சொற்பணம்...நானும் கண்டேன்.
எனும் வீரபாண்டிய கட்ட பொம்மன் படத்தில்
வரும் பாடல் ஆந்தை....அலறவும்..
வாழைத்தோப்பு அழியவும்...என தொடங்கும் வசனமும்
இப்பொழுது காதில் கேட்டவண்ணம் இருக்கிறது.
போது..... பாத்திரம் விழுந்த சத்தம் தான் ராசம்மா என்று சிரித்து கொள்ள வரும் பாடல்





மறக்க முடியாத நினைவுகளும் ஞாபகத்தில் வராத சம்பவங்கள் பல உண்டு. நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா.
அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே.. நண்பனே அடேயப்பா.. எங்கள் மனம்.....எப்படி இடம்பெயர, புலம்பெயர நாம் நினைத்தோ நிர்ப்பந்தம்..
கனடா எப்படி.... ஜேர்மனி எப்படி இத்தாலி எப்படி ...யாருக்கு தெரியும் குடியேற்றத் திட்டத்தில் கிளிநொச்சி
பரந்தன் விசுவமடு கனகராயன் குளம் வன்னியைக் கூட பல கற்பனையின் பின் தான் சென்றடைந்தோம் வேறொரு நாடு...வேறொரு மொழி வேற்று...கலை கலாசாரம்... எப்படி எல்லாவற்றையும் சமாளித்து வாழ்க்கை நடத்துகிறோம்.

- கலகலப்பு தீசன்


INSURANCE

காப்புறுதி

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

RBC Insurance

## உங்கள் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு நம்பிக்கையான நிறுவனம்

நீங்கள் உங்களை ஆயுட் காப்புறுதி செய்வதன் மூலம் உங்கள் அன்புக்குரியவர்கள் எதிர்காலத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும் தங்கள் உறுதியான வாழ்வைத் தொடரவும் நீங்கள் உதவி செய்கிறீர்கள். ஆயுள் காப்புறுதிகளில் பல வகைகள் உள்ளன. அவை பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

### தவணைக் காப்புறுதி TERM INSURANCE

### நிரந்தர ஆயுட் காப்புறுதி PERMANENT INSURANCE & GUARANTEED PAID UP OPTION WITH CASH VALUE

இந்தத் திட்டத்தின்படி உங்கள் ஆயுட்காலம்வரை திட்டம் நீடிக்கும், கட்டுப்பணம் எக்காலத்திலும் அதிகரிக்காது. இத் திட்டத்தில் நீங்கள் விரும்பியபடி 10, 15 அல்லது 20 வருடங்களில் உங்கள் காப்புறுதிக்கான முழுக் கட்டுப்பணத்தையும் செலுத்தி முடிக்கலாம். அதற்கான உத்தரவாதம் உங்கள் காப்புறுதிப் பத்திரத்தில் எழுத்தில் வழங்கப்படும்.

### வீட்டு அடமானக் காப்புறுதி MORTGAGE INSURANCE

வங்கியின்மூலம் கொடுக்கப்படும் ஈட்டுக் கடனுக்கான காப்புறுதித் திட்டத்திலும் பார்க்க, எங்கள் இலகுவான அடமானக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் உங்கள் விருப்பத்திற்கேற்ப உங்கள் வீட்டு அடமானக் காப்புறுதியை தெரிவு செய்வதால் உள்ள சில நன்மைகள்

* உங்கள் பலன் பெறுபவராக (Beneficiary) உங்களுக்கு விரும்பியவரை நீங்கள் தெரிவு செய்யலாம். (வங்கியின் பெயரைத் தெரிவு செய்ய வேண்டியதில்லை)
* அடமானக் கடனுக்காக வங்கியை மாற்ற நேரிட்டால் காப்புறுதித் திட்டத்தை மாற்றவேண்டிய அவசியமில்லை.
* காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப்பணம் எந்தக் கட்டத்திலும் அதிகரிக்காது
* உங்கள் அடமானக் காப்புறுதியை ஆயுள் காப்புறுதியாகவும் மாற்றலாம்.

### வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி NON MEDICAL INSURANCE

40 வயது தொடக்கம் 80 வயது வரையிலானவர்களுக்கு வைத்திய பரிசோதனையின்றி காப்புறுதி செய்யப்படும். பணக் கொடுப்பனவு உறுதி செய்யப்படும். நீரழிவு நோயாளர்களும் இதில் அடங்குவார்கள்.

### சிறுவர் கல்வி சேமிப்புத் திட்டம் R.E.S.P

உங்கள் குழந்தைகளின் எதிர்கால உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டத்தில் அரசாங்கம் வழங்கும் 20 வீத மானயத்துடன் எமது நிறுவனம் வழங்கும் 15 வீத போனஸ் ஆகியவற்றைப் பெற்று நன்மையடையுங்கள்.

### நோய் வருமுன் காக்கும் காப்புறுதி CRITICAL ILLNESS INSURANCE



**SRITHARAN THURAIRAJAH**
(Associate Life Underwriter)


**Cell: 416 918 9771**
**Tel: 416 297 6932**

OUR GUARANTEES ARE WRITTEN IN YOUR POLICY



# விளையாட்டுத் தகவல்கள் - 132

## கிரிக்கெட்



**<u>பேட்டிங் தரவரிசையில் சச்சின் தொடர்ந்து முன்னிலை!!</u>**

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு பின்னர் இந்திய அணி எந்தப் போட்டியிலும் விளையாடாவிட்டாலும் தரவரிசையில் சச்சின் தொடர்ந்து முதலிடத்திலேயே இருந்து வருகின்றார்.

கடந்த பிப்ரவரி, மார்ச் மாதங்களில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் சச்சின் சிறப்பாக விளையாடி தனது



ஆதிக்கத்தை நிலைநாட்டினார். இந்த சிறப்பான விளையாட்டானது தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தை பெறும் நிலையை சச்சினுக்கு கொடுத்துள்ளது. உலகக் கோப்பைக்குப் பின்னர் 6-மாத காலம் ஆன பின்னரும் இந்தியா இன்னும் ஒரு தொடரில் கூட விளையாடவில்லை. இருப்பினும் உலகக் கோப்பையில் சச்சினின் ஆட்டம்

**எஸ். கணேஷ்**

தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தை உறுதி செய்துள்ளது.

பிரைஸ்வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் பேட்டிங் தரவரிசையில் 773 புள்ளிகளுடன் மாஸ்டர் பிளாஸ்டர் சச்சின் முதலிடத்தில் உள்ளார். இவருக்கு அடுத்தபடியாக ஒருநாள் போட்டிக்கான ஆஸ்திரேலியா அணியின் கேப்டனான ரிக்கிபாண்டிங் 763 புள்ளிகளுடன் 2ஆம் இடத்தில் உள்ளார். சச்சினின் சராசரி 44 - 43 ஆகும். பாண்டிங்கின் சராசரி 42 - 16 ஆகும். மே.இ. தீவுகள் அணியின் கேப்டனான பிரையான் லாரா 745 புள்ளிகளுடன் 3வது இடத்தில் உள்ளார்.

பௌலிங் தரவரிசையில் முதலிடத்திற்கு கடும் போட்டி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. சுழற்பந்து வீச்சாளரான முரளிதரன், தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஷான்போலக் இருவருக்கும் இடையே முதலிடத்திற்கு கடும் போட்டி நிலவுகின்றது.

சமீபத்தில் வெளியிடப்பட்ட தரவரிசையில் 893 புள்ளிகளுடன் முரளிதரன் முதலிடத்திலும், ஷான்போலக் 883 புள்ளிகளுடன் 2ஆம் இடத்திலும், ஆஸ்திரேலியாவின் மெக்ராத் 871 புள்ளிகளுடன் 3ஆம் இடத்திலும் உள்ளனர்.

பௌலிங் தரவரிசையில் இந்தியாவின் சார்பில் ஜாஹிர்கான், ஹர்பஜன் இருவரும் இடம்பெற்றுள்ளனர். ஜாஹிர்கான் 742 புள்ளிகளுடன் 9வது இடத்திலும், ஹர்பஜன், ஆன்ட்ரூபிளின்ட்டாப் இருவரும் தலா 728 புள்ளிகளுடன் 10 வது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

**<u>பாகிஸ்தான் அணியின் கேப்டனாக இன்சமாம் உல் ஹக் நியமனம்</u>**

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய கேப்டனாக அந்த அணியின் மூத்த வீரர் இன்சமாம் உல்ஹக் நியமிக்கப்பட்டுள்ளார். பாக். அணியின் கேப்டன் பதவியிலிருந்து அந்த அணியின் கேப்டன் ரஷீத் லத்தீப் திடீரென ராஜினாமா செய்ததையடுத்து பாக். கிரிக்கெட் வாரியம் இந்த முடிவை எடுத்துள்ளது.

லத்தீப் ராஜினாமாவையடுத்து நேற்று லாகூரில் நடைபெற்ற பாக். கிரிக்கெட் வாரியத்தின் நிர்வாகிகளின் கூட்டத்தின் முடிவில் இன்சாமம் உல்ஹக் பாக். அணியின் புதிய கேப்டனாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டதாக பாக். கிரிக்கெட் வாரிய தலைவர் தாகிர் ஜியா நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ரஷீத் லத்திபீன் ராஜினாமாவை ஏற்றுக் கொள்வது கடினமாக ஒன்றாக இருந்தது. உலகக்கோப்பை போட்டிக்கு பிறகு இளம் வீரர்கள் அடங்கிய பாகிஸ்தான் அணியை நன்றாக உருவாக்கியதில் அவரது தலைமைப் பொறுப்பும் பெரும்பங்கு வகித்துள்ளது என்பது மறுக்க முடியாத ஒன்று. எனவே அவரது ராஜினாமா எங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்திவிட்டது. அதிலும் ஒரே ஒரு ஆறுதலான விஷயம் என்ன வென்றால் அவர் தொடர்ந்து அணியின் விக்கெட் கீப்பராக பணியாற்ற சம்மதித்துள்ளார் என்பது தான் என்று ஜியா நேற்று லாகூரில் செய்தியாளர்களிடம் கூறினார்.

வங்கதேச அணிக்கு எதிரான அண்மையில் முடிவடைந்த 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் தற்காலிக கேப்டனாக பணியாற்றிய இன்சமாம் உல் ஹக் சிறப்பாக செல்பட்டார் எனவும் கேப்டன் பதவியினால் அவ்ரது தனிப்பட்ட ஆட்டம் எந்த வகையிலும் பாதிப்படையவில்லை என்பது அவரது தேர்வுக்கு சாதகமான அம்சங்களாக அமைந்தன எனவும் ஜியா சுட்டிக்காட்டினார்.

பாக். அணி அடுத்த மாதம் மூன்றாம் தேதி, தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் ஆடவுள்ளது. திருத்தி அமைக்கப்பட்ட கால அட்டவணையின் படி பாக். அணி தென்னாபிரிக்க அணியுடன் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரிலும், 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட தொடரிலும் ஆடுகிறது.

ஐந்து ஒருநாள் போட்டிகளில் முதலிரண்டு போட்டிகள் முறையே அடுத்த மாதம் 3 மற்றும் 5 ஆம் தேதிகளில் லாகூரில் நடைபெறுகின்றன. கடைசி 2 ஒரு நாள் போட்டிகளும் முறையே அடுத்த மாதம் 10 மற்றும் 12ஆம் திகதிகளில் ராவல் பிண்டியில் நடைபெறுகின்றன. 3வது ஒரு நாள் போட்டி அடுத்த மாதம் 7 ஆம். திகதி பைசாலாபாத்தில் நடைபெறுகிறது.

அடுத்த மாதம் 17 ஆமர் திகதி இரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி லாகூரிலும் 24ஆம் தேதி இரண்டாம் டெஸ்ட் போட்டி பைலாபாத்திலும் நடைபெறுகிறது.


**ACTION HONDA**

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை ஈழத்தமிழ் மகன் சோதீஸ் இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




THIS MONTH SPECIAL

All 2003 vehicles & used Cars
இந்நிறுவனத்தை விட வேறு ஏதாவது இடத்தில் குறைந்த விலையில் வாகனம் வாங்குவீர்களானால் அதற்குரிய எரிபொருள் செலவு தரப்படும்.

**416-704-1179**


அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm
4334 Kingston Rd, Scarborough




15 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 145




**இட-வல**
1. நண்பன்
4. கால் நடைத் தொகுதி
5. பெரியகுளம்
6. ஆதவன் (வல-இட)
8. பத்து (வல-இட)
9. ஒழுகு (வல-இட)
10. ஆகாயம்
11. புத்திரி
13. நறுமணம்
16. கொடு

**மேல்-கீழ்**
1. நட்சத்திரம்
2. துடுக்கு
3. மனத்துணிவு
4. விஷ்ணு
5. எதற்கு?
7. பொருத்தம் (கீழ்-மேல்)
10. கூர்மை
12. மேகம்
14. யானை (கீழ்-மேல்)
15. மூத்த சகோதரி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ | ஞ் | ஞா | ன் | று | ம் | | மா |
| டு | | னி | | ம | | க | வி |
| த் | | | | | தீ | | ட் |
| து | வ | ர் | ப் | பு | | க | ட |
| க் | | | | ண் | | ள் | பு |
| கா | | க | ண் | ணி | | | ர |
| ட் | | டு | | ய | | ஓ | ம் |
| டு | ட் | கு | | ம் | வ | சை | |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் Oct. 28, 2003க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**144இல் வெற்றி பெற்றோர்**
1) K. Thilageswary, Scarborough
2) J. Christy, Donmills


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
*அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
*வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

(416) 267-0408 731 - 733 kennedy Road [Ken-Mark Plaza]

# நவராத்திரிக்கொலு

ஆண்டு தோறும் புரட்டாதிமாதத்து சுக்லபட்ச நவமியை ஒட்டி ஆலயங்கள் மற்றும் இந்துக்களின் இல்லங்கள் தோறும் கொண்டாடப்படும் பண்டிகை நவராத்திரி ஆகும். துர்க்கை லக்சுமி, சரஸ்வதி ஆகிய



மூன்று தேவியரை வணங்கி வழிபடும் பண்டிகை இதுவாகும். நவராத்திரி ஒன்பது இரவு பண்டிகையாக இருந்தாலும் வெற்றிவிழாவான விஜய தசமியையும் சேர்த்து பத்துநாட்கள் கொண்டாடப்படுகின்றது. தமிழர் வாழும் பகுதிகளில் நவராத்திரி எனக் கொண்டாடப்படும் இப் பண்டிகை

## நா. க. சிவராமலிங்கம்

வங்காளத்தில் துர்க்காபூசை எனக் கொண்டாடப்படுகின்றது. வங்காளிகள் காளிக்கு முக்கிய இடம் கொடுக்கிறார்கள். வட இந்தியாவின் ஏனைய பகுதிகளில் ராம் லீலா எனக்கொண்டாப்படுகின்றது. கர்நாடகத்தில் தசரா எனக் கொண்டாப்படுகின்றது. அங்கே தேவி சாமுண்டேஸ்வரி என வழிபடப்படுகின்றாள். தசரா பண்டிகையைப் பார்ப்பதற்கு வெளிநாட்டவர்களும் வருவதுண்டு. தமிழ் நாட்டில் நவராத்திரியை கொலு என்பர். ஏனெனில் நவராத்திரி நாட்களில் வீடுகளில் கொலு முக்கிய இடம் பெறுகின்றது. கொலு ஒன்பது அழகான பொம்மைகளை வரிசையாக அடுக்கி வைத்து உறவினர்களையும் அயலவர்களையும் அழைத்து மகிழ்ச்சி



யில் திளைபதாகும். முச்சக்திகள் வழிபடும் பண்டிகை ஆயிற்றே! எனவே அவர்களின் பிரதிநிதிகளான பெண் குழந்தைகளுக்கு இது முக்கிய பண்டிகையாகும். எனவே குழந்தைகளுக்கு குதூகலமான பண்டிகை இதுவெனலாம். நவராத்திரி நாட்களில் வீடுகளைச் சுத்தம் செய்து பொம்மைகளை காட்சிப் பொருளாக வைப்பதற்கு படிகட்டுவார்கள். ஐந்து, ஏழு, ஒன்பது என்ற ஒற்றை எண்களில் படிகட்டுவார்கள். அப்படிகளை தூய வெள்ளைத் துணிகளினால் மூடுவார்கள். கொலுவின் முதல் படியில் கும்பம் வைப்பார்கள். இதுவே கும்பகலசம் அதன்பின் படிகளில் சிறியனவும் பெரியனவுமான பொம்மைகளை அழகாக வரிசைப்படுத்தி வைப்பார்கள். கடவுள் பொம்மைகள், சரித்திர நாயகர்கள், சமயகுரவர்கள், புராணக்கதைகளில் வரும் பாத்திரங்கள், மிருகங்கள், பறவைகள் மற்றும் காட்சிகளை சித்தரிக்கும் பொம்மைகள், தொழில் சம்பந்தமான பொம்மைகள் ஆகியவற்றை அழகாக வரிசைப்படுத்தி வைப்பார்கள். இப் பொம்மைகள் யாவும், ஒரு குடும்பத்தில் தலைமுறை தலைமுறையாகப் பேணப்பட்டு வரும் பொம்மைகளாகும். நவராத்திரிக் கொலுவைப்பார்த்தே ஒரு குடும்பத்தின் கற்பனையையும். கலாரசனையையும் தெரிந்து கொள்ளலாம். பொம்மைகளை அடுக்கடுக்காக வைத்த பின்னர் அவரவர் வசதிக்கும் ரசனைக்கும் ஏற்ப தோரணங்களாலும், விளக்குகளாலும், கோலங்களாலும் அழகுபடுத்துவார்கள். அழகும், வளமும், கம்பீரமும் செறிந்து, நவராத்திரி கொலு பார்க்கப் பரவசமூட்டும் தமிழ் நாட்டில் இது சிறப்பாக இடம் பெறுகின்றது.

ஒன்பது நாட்களிலும் பெண்பிள்ளைகளுக்கு விதம்விதமாக வேஷம் அணிவித்து மகிழ்வார்கள். தங்கள் வீட்டுக்கொலுவைப் பார்க்க வரும்படி அண்டை அயலவர்களை அழைப்பார்கள். பார்க்க வருபவர்கள் கொலுமுன் அமர்ந்து பாடுவார்கள். வீட்டிற்கு வந்தவர்களுக்கு வெற்றிலை, பாக்கு, பழம், சுண்டல், இனிப்புப் பண்டங்கள் வழங்குவார்கள். தின்பண்டங்களுக்காக குழந்தைகள் வீடுகளுக்கு படை எடுப்பார்கள். கொலு கைத்திறனை வளர்ப்பதுடன், பெண்பிள்ளைகளின் குரல் வளம், ஒப்பனை, நாட்டியத்திறன் ஆகியவற்றையும் வளர்க்கின்றது எனலாம். நீயும் பொம்மை, நானும் பொம்மை, நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை என்ற தத்துவத்தையும் கொலு உணர்த்துகின்றது எனலாம். நவராத்திரி நாட்களில் சக்தி கொலுவில் வீற்றிருப்பதையும் இது உணர்த்துகின்றது எனலாம்.



செய்யும் தொழிலே தெய்வம் என் பதற்கேற்ப ஒன்பதாம் நாள் ஒவ்வொருவரும் தத்தமது தொழிற் கருவிகளை வைத்து தொழுது நிற்பர். இது ஆயுதபூசை எனப்படும். பத்தாம் நாள் இரவு கொலுப்பொம்மைகள் யாவும் பெட்டிக்குள் அடங்கிவிடும்.

இந்து சமயப் பண்டிகைகள் யாவும் இன்பத்தை ஏற்படுத்தி, பெருக்கிப் பகிர்ந்து கொள்ள வழி செய்கின்றன எனலாம். மகிழ்ச்சியை உண்டு பண்ணி மக்களை களிப்படையச் செய்வதுடன் இறைவன் உணர்வினையும் நவராத்திரிப் பண்டிகை ஏற்படுத்துகின்றது. ஆதாரம் சக்தி என்பதனை அறிவுறுத்தும் பண்டிகை இதுவாகும்.


## பிள்ளை பராமரிப்பு





MARKHAM & SHEPPARD பகுதியில் இரண்டு வயதிலிருந்து பத்து வயதுப் பிள்ளைகளைப் பராமரிக்கவும் பாடசாலைக்கு கூட்டிச் செல்லவும் அழையுங்கள். அத்துடன் பாடசாலையில் மதிய வேளையில் நிற்கும் மாணவர்களை வீட்டிற்கு கூட்டி வந்து பராமரிக்கும் வசதியும் உண்டு. ஒரு சில மணிநேரப் பராமரிப்பு வசதியும் உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: **416-293-0947 / 647-298-4292**



# New Kalyani Catering & Take out

NOW

292 Markham Road, Scarborough, Ontario

**416-261-9774**



ஒவ்வொன்றும் $99.00 மட்டுமே

**கொத்துரொட்டி (ஆடு அல்லது கோழி)**
தண்டூரி Chicken
முட்டைச் சம்பல்
றோல்ஸ்
Fruit Salad with Ice Cream

**Singapore Noodles (Chicken Shrimp)**
தண்டூரி Chicken
கட்லட்
Fruit Salad with Ice Cream

**New Kalyani யின் படையப்பா Noodles**
(MixMeat, Beef, Pork, Chicken)
தண்டூரி Chicken
Fish கட்லட்
Fruit Salad with Ice Cream

**Megoring Noodles (Chicken & Shrimp)**
முட்டைச் சம்பல்
தண்டூரி Chicken
Patties
Fruit Salad with Ice Cream

**ரொட்டி**
Mala Chicken
றோல்ஸ்
டெவில் Beef
Fruit Salad with ice cream

**Fried Rice (Sea Food)**
Beef with Canadian Brocoli
சில்லி Chicken
அன்னாசிப்புடிங்

**பிட்டுக் Combo**
இஞ்சிச் சம்பல்
மீன் பொரியல்
பருப்பு
நண்டு or இறால் or கணவாய்
வட்டிலப்பம்

**மரக்கறிச் சாப்பாடு**
முருங்கைக்காய் கூட்டு, உ. கிழங்கு மசாலா, பருப்பு, பூசணி + மரவள்ளி பால்கறி கோவாவறை, அச்சாறு, பப்படம், ரசம், வடை, பாயாசம்.

**புரியாணிச் சோறு கோழி or ஆடு**
றோல்ஸ்
முட்டை
தக்காளி, சின்னவெங்காயம் சலாட்
அன்னாசிப்புடிங்

**இடியப்ப புரியாணி (Vegetable)**
கத்தரிப்பிரட்டல்
பருப்பு
உ.கிழங்கு + தக்காளி குழம்பு
அன்னாசிப் புடிங்



# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

எம்மில் பெரும்பாலானோர் வாழ்வில் எமக்கு ஏற்படும் சிறு சிறு பிரச்சனைகளைச் சரிவரச் சமாளிக்க முடியாமல், அவற்றைப் பெரிதுபடுத்தி "இங்க பாருங்க, எனக்கு நடந்த கொடுமை உங்களுக்கு தெரியுமல்ல, எப்படிப் பரிதவிக்கிறேன் தெரியுமா? என்னைப் பார்க்கப் பாவமாய் இல்லையா உங்களுக்கு" என்று அழுவார்கள். இவ்வித மனப்பான்மை உள்ளவர்கள் மற்றவர்களுக்குத் தங்கள் மேல் ஏற்படும் பரிதாப உணர்வில் திளைத்து, அதில் சுகம் கண்டு அப்படியே தேங்கி நின்று விடுவர். இப்படியான மனப்பான்மை சரியா பிழையா என்பதை நீங்களே உணர்ந்து உங்கள் பாதையை தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

## லலிதா புரூடி

விதியின் விளையாட்டால் பெருமளவு பாதிக்கப்பட்டும் தமது சரியான மனப்போக்கு விடாமுயற்சி, ஆளுமை வளர்ச்சி என்பவற்றால் எம் யாவருக்கும் கலங்கரை வெளிச்சங்களாக ஒளிவீசும் பலர் எம் அறிமுக வட்டத்தினுள் நிச்சயம் இருப்பார்கள். இத்தகையவர்களை எமக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக உபயோகித்து, நாமும் அவர்களைப் போன்ற மனப்பான்மையுடன் பிரச்சனைக்கூடாக வழி நடந்து நிச்சயம் வெற்றி காணலாம். உலகிலுள்ள சகலவற்றிலும் ஆன்மீகம் நிறைந்திருக்கின்றது. எங்கும் யாவற்றிலும் நிறைந்துள்ள ஆன்மீகத்தை நாம் அடையாளம் காணும் போது, இறைவனின் இயற்கையான உண்மை ஸ்வரூபம், அவரின் தரிசனம் எமக்குக் கிடைக்கும். இறைவனின் இயற்கை ஸ்வரூபத்தை உணர்வதால் எம்மை நாமே உணர்ந்து கொள்ளலாம்.



வாழ்வின் மாயா-ஜாலங்களில் அகப்பட்டுக் குழம்பி ஏமாந்து இன்றுவரை நீ துடித்துக் கொண்டிருக்கலாம். உன் சூழலிலுள்ள நபர்கள், விஷயங்கள், தோற்றங்கள் உன்னை ஏமாற்றியிருக்கலாம். இன்று மட்டும் நீ ஆன்மீக விழிப்புணர்வு வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொள். இறைவன் அருள் அளிக்கும் உனக்குள்ளும் உன் சூழலிலுள்ள சகலதையும் ஊடுருவும் ஆழ்ந்த ஆன்மீக அறிவை நன்றியுடன் ஏற்றுக்கொள். இன்று எனது ஆன்மீகப் பார்வையை போஷித்து கட்டியெழுப்ப ஆரம்பிக்கின்றேன். எனது சொந்த ஆலோசனையை நான் ஏற்று உபயோகிக்கலாம் என்பதை நான் உணர்ந்ததும் என் வாழ்வு வளம் பெறும். Gut feeling என்பது என் உள்ளுணர்வு. எனக்கொரு மகன் இருந்தால், வாழ்க்கையின் சவால்களை சமர்த்துடன் சமாளிக்க அவனுக்கு தெரிந்திருக்க வேண்டிய சகலவற்றையும் முன்னேற்பாடாய், நான் அவனுக்குச் சொல்லிக் கொடுப்பேன். வாழ்வில் வரும் நன்மை தீமை இரண்டையும் நன்றியுடன் ஏற்கப் பழக வேண்டும் என்பதை என் மகனுக்குக் கற்பிப்பேன். எப்போதும் அவர் பாதுகாக்கப்படுவார். எதைச் எதைச் செய்தாலும் அவன் எப்போதும் நேசிக்கப்படுவான் என்பதை அவனுக்குக் கூறுவேன். வாழ்வின் மயிர்க் கூச்செறியப்பண்ணும் அதி அற்புதச் சம்பவங்கள், அநுபவங்கள் எல்லாம் தவறாமல் அவனுக்கும் கிடைக்கும் என என் மகனிற்குச் சொல் வேன். ஒரு நேரம் ஒன்றைத்தான் மையப் படுத்தி முழு உணர்வோடு செய்யச் சொல்வேன். செய்வதை முற்று முழுதாக இன்பத்துடன் அனுபவித்து, அந்த ஆனந்தத்தை அடுத்த செயற்பாட்டிற்கும் எடுத்துச் செல்லச் சொல்வேன். மற்றவர்களில் சிலர் அவனை அன்புடன் நடத்தாவிடினும், அவனை சகலருக்கும் அன்பு காட்டி நடக்கச் சொல்வேன். எல்லோரிடமும், எல்லாவற்றிலும் ஏதாவொரு நற்குணத்தைக் கண்டு பாராட்டும்படி சொல்வேன். நீ பாராட்டப் பாராட்ட இன்றும் பாராட்ட வேண்டியவை உன்னை சூழ்ந்து கொண்டே இருக்கும் என்று அறிவுறுத்து வேன்.

சிலருக்கு நன்மை ஒரு ஒவ்வாமையாக (Allergy) மாறிவிடும். தனக்கு நன்மை வரும் என நம்பிக்கை இல்லாதவர்கள், முன்பு தமக்கு நடந்த தீமைகளையே திரும்பத் திரும்ப அசைபோட்டு தம் கோபத்தையும் வெறுப்பையும் வளர்த்துக் கொண்டிருப்பர். பழைய சண்டை சச்சரவுகளையும் ஞாபகப்படுத்தி அசைபோட்டு இவர்கள் திரும்பவும் ஆரம்பித்து பிரச்சனைக்குள்ளாவார்கள். ஏதாவது நன்மை தங்களுக்கு வந்தால்/நடந்தால் கூட, "எப்படி இது நடந்தது, இதை யார் எனக்குச் செய்தது? ஏன் இந்த நன்மை எனக்கு இப்ப வந்திருக்கிறது? இதனால் எனக்கு எவ்வளவு கரைச்சல், செலவு வரப்போகின்றது. இது எனக்கு உண்மையில் நல்லதுதானா" என்று குழம்புவர்.

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் - 905-624-9617


**RENOVATIONS**

**KITCHEN CABINET, BASEMENT RENOVATION**

மற்றும் சகல திருத்த வேலைகளுக்கு

அழையுங்கள்


**416-757-3109**





**NTE AUTO**


**New Trade Engineering Inc.**



ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair



**SIVABALAN**

**416.750.1573**


**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

**151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON**

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

**INCOME TAX**

- Incorporation
- Business Set-up & Registration
- Accounting & Bookkeeping
- Payroll, G.S.T. & P.S.T.
- Incomes Taxes (Free E-File)
- CCRA Audit and Appeals



Tarsem Parmar

**FINANCIAL SERVICES**



- Mortgages

upto 1.5% below the bank posted rates

- Lines of Credit
- Business Loans
- Personal Loans

**PERMANENT RESIDENT CARDS**

Free Applications filled for Seniors for PR Cards

Special Discounted rates to Taxi/Truck Operators, Serving the community since 1992

| Scarborough & Markham Area | Brampton |
|---|---|
| 416-937-1563 | 416-937-1563 |
| 2 Irenemount Cres., Markham (Markham Rd./Steeles Ave.) | 8 Strathearn Ave., Unit 1 (Dixie/Steeles) |

# நவராத்திரி விழா

முப்பெரும் தேவியை தொழுதிடுவோம்



*கனடாத் தமிழர் இதயத்திலே*
*களிப்புடனே தானும் கொலுவிருந்து*
*அடியவர்க்கு அருள்மழை பொழிகின்ற*
*அன்னை பராசக்தி வாழியவே*
*(கனடா......)*

*கவிஞர் நாவிலே குடியிருந்து*
*கலைகள் யாவும் படைத்திடுவாள்*
*ஆயகலைகள் அளித்து எமை*
*அறிஞனாக ஆக்கிடுவாள்*
*(கனடா......)*

*வீரம் செல்வம் கல்வியின் வித்தாய்*
*விளங்கிடும் தாயே அவளேதான்*
*புவிதனில் மாந்தர்க்கு யாவுமளித்து*
*புதுமை எல்லாம் படைப்பவள்தான்*
*(கனடா.....)*

*பரமன் விஸ்னு பிரமாக்கு மனைவி*
*பார்வதி லக்சுமி சரஸ்வதியாய்*
*மும்மூன்று இரவுகள் அருள்பொழியும்*
*முப்பெரும் தேவியைத் தொழுதிடுவோம்.*
*(கனடா....)*

உதயகரன் துரைராஜா
416-287-6171

# ஹோமியோபதி வைத்தியம்

## HOMOEOPATHY TREATMENT

*பலவருடங்களாக நோயினால் பீடிக்கப்பட்டு மருந்துகள் பாவித்து இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லையா?*
*கவலையை விடுங்கள்*

இலங்கையில் பலவருட அனுபவம் உள்ளவரும் தற்போது கனடாவில் ஹோமியோபதி- அக்கியுபஞ்சரில் சிறப்புப் பெற்றவரும் மிகக்குறுகிய காலத்தில் பல அற்புதமான சிகிச்சைகளைச் செய்து மக்களை வியக்கச் செய்தவருமான

**Dr. S. கிறிஸ்ரி MD (MA)**
அவர்களை அணுகுங்கள்

சகல சர்மவியாதி அத்துடன் சொராசிஸ் (Psoriasis) இதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படும். தொய்வு (Asthma) அலர்ஜி(Allergy), மூக்கடைப்பு, தீராதசளி(Phlegm) , மூட்டு வலிகள் (Rheumatism, Arthrities) , நாட்பட்ட நோவுகள், மனநோய் (Mental De pression) , சக்கரை வியாதி, கொலஸ்ரோல் (Cholesterol) , ஆரம்பம். பயப்பட வேண்டாம்.

ஸ்திரி ரோகம் (Female, Male Problems) பெண்களுக்கு அதிக பிரச்சனையாக உள்ள முகப்பரு, சொடுகு, தலைமயிர் உதிர்தல், ஆகியவற்றுக்கு உடன் நிரந்தர தீர்வு காணப்படும்.

**பிரச்சனை எதுவானாலும் நிரந்தர தீர்வு காண உடன் தொடர்பு கொள்ளவும்**

**647-887-9004 (ஸ்காபரோ)**

அத்துடன் விஞ்ஞானம் (Science) படித்த இத்துறையில் ஆர்வமுள்ள மாணவிக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, படிப்படியாக வேலை வழங்கப்படும். வாகன வசதியுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

mhc

# MOHAN HOMEOPATHIC CLINIC



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

**WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:**

- STRESS
- ALLERGIES
- SKIN PROBLEM
- SEXUAL PROBLEMS
- RESPIRATORY PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- FOOT PROBLEM
- TREAT WITH MASSAGE THERAPY

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | |
|---|---|
| Cough | Flu |
| Depression | Anxiety |
| Asthma | Tonsillitis |
| Gout | Arthritis |
| P.M.S | Leucorrhea |
| Migraines | Hair Loss |
| Diabetes | Cystitis |
| Cancer | Prostatitis |
| Obesity | Hemorrhoids |
| Stumatitis | Colitis |

Also other Acute & Chronic Problems
**HOMEOPATHIC PRACTITIONER**

TEL: 416-298-7537

5200 Finch Ave, East Suite 200
(At Middle Field), Scarborough, M1S 4Z4

மேலும் பல பக்கங்கள் 16, 17, 18

### வேலை! வேலை! வேலை!

- தையலிற்கு ஆட்கள், சமையலிற்கு ஆட்கள் தேவை.
- MIDLAND & ST. CLAIR பகுதியில் DANFOTH ROAD இல் 1 BEDROO BSMT FOR RENT.
- VAN FOR SALE
- 1994 DODGE CARAVAN VAN FOR SALE.

தொடர்புகளுக்கு: மரியா: 416-510-0952
416-803-7599

### வேலை வாய்ப்பு

விஞ்ஞானம் (Science) படித்த ஹோமியோபதி வைத்தியத்துறையில் ஆர்வமுள்ள மாணவிக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, படிப்படியாக வேலை வழங்கப்படும். வாகன வசதியுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
அழையுங்கள் 647.887.9005

### பிள்ளைகள் பராமரிப்பு

**BRIMLEY & DENISON பகுதியில் ஒரு வயதிலிருந்து 5 வயது வரை உள்ள உங்கள் பிள்ளைகளைப் பராமரிக்க அழையுங்கள் 905-474-5865**

### வீடியோ கமரா விற்பனைக்கு

JVC 3CCD PROFESSIONAL CAMERA (SVHS) மிகவும் குறைந்த விலையில் விற்பனைக்கு உள்ளது. இதன் மூலம் பிறந்தநாள் திருமணம் போன்ற கொண்டாட்டங்களைப் படம் பிடிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 416-729-9858

### ARTICLES FOR SALE

*MARKHAM & MILNER*
*DOUBLE BED HEAD BOARD & MATTRESS, SINGLE BED WITH MATTRESS., SINGLE SOFA (ஒரு இருக்கை), MIRROR இன்னும் பல பொருட்கள் விற்பனைக்கு உண்டு.*
*தொடர்புகளுக்கு: 416-412-7582*

### கடை விற்பனைக்கு-STORE FOR SALE

DAISYMART STORE FOR SALE. GOOD LOCATION. $35,000 + STOCK. REASON FOR SALE NO MAN POWER.
தொடர்புகளுக்கு: CELL: 416-818-3032

### CAR FOR SALE

*ACURA VIGOR 1992. GOOD CONDITION.* AUTO, PURPLE COLOUR, PRICE $4,200. தொடர்புகளுக்கு: 905.479.5236

### VAN FOR SALE

1998 TOYOTA (CIANNA CE), GREY COLOUR, 117 KM, AC, AUTO, PRICE $15,995.
PL. CALL: 905-472-5471



# அறுவை 3



‘ஹலோ!’
‘கந்தவனம் ஐயாவோட பேசலாமோ?’
‘பேசுங்கோ!’
‘நீங்கள் தானே கந்தவனம்?’
‘ஓம் ஓம். கந்தவனம் தான் பேசுறேன். சொல்லுங்கோ!’
‘நான் உங்களுக்கு கனதரம் எடுத்தனான். இண்டைக்குத்தான் உங்களை பிடிக்க முடிஞ்சுது.’
‘இங்கே செய்தி ஒன்றும் பதிவு செய்ததாய்த் தெரியேல்லையே!’
‘நான் ஒரு விசயம் கொஞ்சம் தனிப்பட்ட முறையிலே உங்களோடை கதைக்கவேண்டும்மெண்டதாலை செய்தி ஒண்டும் விடேல்ல.’
‘என்ன விடயம்?’
‘உங்களைப்பற்றி சிநேகிதன் ஒருவன் சொன்னான் ஐயா.’
‘சரியாய்ப் போச்சு! என்ன, அந்தாள் ஆட்களோடு பேசமாட்டுது, தலைக்கனம் பிடிச்சமனுசன், கூட்டங்களிலே சும்மா அலட்டிக் கொண்டு திரியுது, அப்படி இப்படி என்று அள்ளி வைச்சிருப்பானோ!’
‘இல்லை ஐயா! அப்படி ஒண்டும் இல்லை. அவன் மெத்த நல்லாத்தான் உங்களைப்பற்றிச் சொன்னவன்! நீங்கள் நல்லாய்க் கதை எழுதுவியள் எண்டு உங்களோடை ஒருக்கால் கதைக்கச் சொன்னான்.’
‘ஏன் ஏதும் பத்திரிகை கித்திரிகை நடத்தப்போறியளா அல்லது மலர் அடிக்கப்போறியளா?’
‘இல்லை ஐயா. நான் கனடாவுக்கு வந்த மூன்று மாதந்தான். இப்ப நான் படுற பாட்டுக்கை பத்திரிகையாவது மலராவது ... ... “நீங்கள் ஊரிலை எவடம் ஐயா?’
